9th August 1963]

திரு. எம். எஸ். மணி : பேட்டை கூட்டுறவு ஆலை லாபகரமாக நடக்கிறது என்றூர்கள். அது லாபகரமாக நடக்கப் பாடுபட்ட தொழிலாளர்களுக்கு 1960-61-ல் போனஸ் கொடுக்கப்படவில்லை என்பதை அறிவார்களா ? அப்படியானல் தொழிலாளர் அமைச்சர் அவர்களுக்குச் சிபார்சு செய்வார்களா ?

MR. SPEAKER : This question relates to the Hon. Minister for Labour. The Hon. Member should give notice of a separate question.

** 67 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வந்தவாசியில் அமைக்க இருந்த கூட்டுறவு நூற்பு ஆலையை வேலூருக்கு மாற்றியது ஏன் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிலம், தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து, கச்சாப் பொருள் கிடைக்கும் வசதி கள், வேண்டிய பங்குத் தொகை வசூலாகும் சூழ்நிலை, இவை களைக் கவனித்துக் கூட்டுறவு நூற்பு ஆலையை வேலூரில் அமைப்ப தெனத் தீர்மானிக்கப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் இப்பொழுது கூறிய காரணம் புதுமையாக இருக்கிறது. முதலில், வந்தவாசியில் நூற்பு ஆலை ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டு, வந்தவாசியில் பங்குத் தொகையும் வசூலிக்கப்பட்டது என்ற ஒரு நிலைமையும் இருந்தது. அங்கு பங்குத் தொகை வசூலிக்கப்படாததன் காரண மாகத்தான் வேலூருக்கு மாற்றப்பட்டதாகத் தெரிகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவது உண்மையா ? அப்படியிருந்தால், முதலில் வந்தவாசியில் ஆலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு, பங்குத் தொகை வசூலிக்கப்பட்டது ஏன் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சம்பந்தமாக ஒரு குழப்பமான அபிப்பிராயம் இருப்பதை நான் விளக்க விரும்பு கிறேன். ஒரு ஜில்லாவிலே கூட்டுறவு ஆலை அமைக்க வேண்டு மென்று சொன்னல், ஒரு இடத்தை மாத்திரம் சர்க்கார் தேர்ந் தெடுப்பதில்லை. இரண்டு, மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்து பிறகு எந்த இடத்தில் முடிவாக வைக்க முடியும் என்பதைத் தீர்மானிக்கிறோம். இரண்டு, மூன்று இடங்களைத் தேர்ந்தெடுத்த உடனேயே, அந்த அந்த ஊரில் இருப்பவர்கள் பங்குத் தொகை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்து விடுகிறூர்கள். அந்த அந்த ஊரில் ஆலை ஏற்படுவதற்கு முடிவாகத் தீர்மானிக்கப்பட்டு விட்டது என்று நினைத்துக்கொண்டு. பிறகு கடைசியில் எல்லா வசதிகளையும் கருதி ஒரு இடத்தில் வைப்பது என்று முடிவு எடுத்த வுடன், மற்ற இடங்களில் இருப்பவர்கள் தங்கள் ஊரில் வைக்க வில்லை என்று புகார் சொல்லுகிறூர்கள். வட ஆற்காடு ஜில்லாவில் வந்தவாசி மட்டுமல்ல, திருவண்ணுமலையிலும் காலம் சென்ற பழனிப் பிள்ளை அவர்கள் பங்குத் தொகை வசூல் செய்ய ஆரம்பித்

[9th August 1963

தார்கள். என்னென்ன வசதிகள் இருக்கின்றன, எப்படி ஆலையை நன்றாக லாபகரமாக நடத்த முடியும். அதற்கு எந்த இடத்தில் பங்குத் தொகை கிடைக்கிறது என்பதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு கடைசியில் எந்த இடத்தில் ஆலையை வைப்பது என்று முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்த முடிவு தான் இது.

திரு. எஸ். முத்துலிங்கம் : வந்தவாசி தாலுகாவில் உள்ள தேசூர், கீழ்கொடுங்காலூர் முதலிய பகுதிகளில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறபடியால், வந்தவாசியில் மேற்படி நூற்பு ஆலையை அமைக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு ஜில்லாவில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஆரம்பிப்பதற்கே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதற்குப் போதிய நிதி வசதி கிடைப்பதில்லை. இரண்டாவது நூற்பு ஆலை அமைப்பது இப்பொழுது சாத்தியமில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம் : பங்குப் பணம் எங்கு அதிகமாக வசூலாகுமோ அங்குதான் வைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வேலூரில் எவ்வளவு பங்குத் தொகை வசூலிக்கப்பட்டது ? திருவண்ணாமலையிலும் பங்குத் தொகை வசூலிக்க ஆரம்பித்தார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ஏதேனும் அப்படி வசூல் செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாங்கள் யாரையும் வசூல் செய்யச் சொல்லவில்லை. அவரவர்கள் இடத்தில் எத்தனை பங்குத் தொகை கொடுப்பார்கள் என்று லிஸ்டு கொடுக்க வேண்டும் முதலில். முதலிலேயே பங்குத் தொகையை வசூல் செய்து விட்டால் பிறகு திருப்பிக் கொடுக்க வேண்டிய கஷ்டம் ஏற்படும். அப்படிப் பார்த்ததில் வேலூரில் சற்று அதிகமாகப் பங்குத் தொகை வசூலாகும், போதிய வசதிகள் இருக்கின்றன என்று சர்க்காருக்குத் தோன்றியதால், அந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : கூட்டுறவு நூற்பு ஆலையில் பங்கு எடுக்கிற நேரத்தில் ஒருவர் இவ்வளவு தான் பங்கு எடுக்கலாம் என்று வரையறை இருக்கிறதா ? அல்லது, ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் பங்கு எடுக்கலாம் என்ற நிலை இருந்தால் கூட்டுறவு முறைக்கே கேடு வந்துவிடாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனி நபர் எத்தனை பங்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதற்கு வரையறை இருக்கிறது. ஆனால், கூட்டுறவு ஸ்தாபனங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பங்கு எடுத்துக் கொள்ளலாம். அதற்கு வரையறை கிடையாது.

திரு. ர. ஜீவரத்னம் : வந்தவாசியில் கூட்டுறவு நூற்பு ஆலை ஆரம்பிக்கப்படும் என்று முடிவெடுத்தார்களே ? சர்க்கார் அனுமதியின் பேரில் அவ்வாறு முடிவு எடுக்கப்பட்டதா ?

9th August 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதில் முடிவு ஒன்றுமில்லை. இரண்டு, மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் வந்தவாசியும் ஒன்று.

திரு. சி. பொன்னுசாமி: நம்முடைய மாநிலத்தில் எத்தனை கூட்டுறவு நெசவு ஆலைகள் இருக்கின்றன? இல்லையானால், புதியதாகக் கூட்டுறவு முறையில் நெசவு ஆலை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் அனுமதி கொடுக்க முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது 11 கூட்டுறவு ஆலைகள் நம்முடைய ராஜ்யத்தில் இயங்குகின்றன என்று சொன்னேன்.

திரு. சி. பொன்னுசாமி: நெசவு ஆலைகளைப்பற்றி நான் கேட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம்முடைய ராஜ்யத்தில் நெசவு ஆலைகள் கூட்டுறவு முறையில் கிடையாது.

திரு. ப. உ. சண்முகம்: வந்தவாசியில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றதால், அங்கிருந்து நூற்பு ஆலை வேலூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்ற செய்தி உலவுகிறதே, அது உண்மையா?

MR. SPEAKER: This question implies an insinuation.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சாதாரணமாக எந்த நிகழ்ச்சி நடந்தாலும், அரசியல் கட்சிகள் தங்கள் நலனுக்காக அதைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்வார்கள். அந்த முயற்சியில் இதுவும் ஒன்று என்று நினைக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, நூற்பு ஆலை வேலூரில் அமைப்பதற்குத்தான் வசதி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அந்த இடத்தை பார்த்ததாக நான் அறிகிறேன். அதே போல் வந்தவாசியையும் பார்த்தார்களா? பார்த்து இடம் வசதி இல்லை என்று தீர்மானிக்கப்பட்டதா? அப்படிப் பார்த்திருந்தால் எப்பொழுது பார்த்தார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இடம் பார்ப்பதற்கான கட்டமே வரவில்லை. இதிலே, அதற்கு முன்பே பணம் வராது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

திரு. கே. மூக்கையா தேவர்: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட கதிர்கள் எத்தனை? கொடுத்தது எத்தனை? பாக்கி எத்தனை இருக்கிறது? பாக்கி இருக்கிறது அத்தனையும் கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப்படும் என்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

[9th August 1963

திரு. ர. ஜீவரத்னம் : கனம் தலைவர் அவர்களே, வேலூரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் கூட்டுறவு நூற்பு ஆலைக்குத் தனி நபர்கள் கூட்டுறவுத் துறையிலே எடுத்துக் கொள்ளவேண்டிய பங்குத் தொகைக்கு மேல் அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Information is not a question.

தாம்பரம் சானடோரியம் ஸ்டேஷன்

* 68 *கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை* : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பீச்சிலிருந்து தாம்பரம் போகும் எலக்ட்ரிக் டிரெயின்களை தாம்பரம் சானடோரியம் ஸ்டேஷனில் நிற்க ஏற்பாடு செய்யும்படி மத்திய சர்க்காருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : The Madras Government have not made any such representation to the Government of India.

ஆட்சிமொழி பற்றி பத்திரிகை நிருபர் மாநாடு

* 69 *கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்* : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்திய ஆட்சிமொழி மசோதாவைப்பற்றி விளக்குவதற்காக ஏப்ரல் திங்களில் கல்வியமைச்சர் விசேஷ பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை சென்னைக் கோட்டையில் நடத்தியது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசேஷப் பத்திரிகை நிருபர் கூட்டம் எதுவும் கூட்டப்படவில்லை. பத்திரிகை நிருபர்கள் எனது அறையில் என்னைச் சந்தித்தபோது ஆட்சி மொழி மசோதா மீது என் அபிப்பிராயத்தை வெளியிட்டேன்.

No special Press Conference was held. I expressed my views on the Official Language Bill when the representatives of the Press met me in my chamber.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த ஆட்சி மொழி மசோதா பற்றித் தமிழக காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களும் மற்ற மாநில உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், சென்னை அரசு இந்த மசோதாவை ஆதரிப்பதாகச் சொல்லும்படி சென்னை அரசுக்கு மத்திய அரசிலிருந்து நமது நிதி அமைச்சர் அவர்களுக்குத் தனியாக ஏதாவது தாக்கீது வந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் தாக்கீது வரவில்லை. அப்படித் தாக்கீது வந்தாலும் அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. அப்படி ஒன்றும் தாக்கீது கொடுக்கமாட்டார்கள். அதற்கு முன்பு நான் டெல்லியில் இருந்த